# 2023

# வருடாந்த அறிக்கை



பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிட்டெட்

# பொருளடக்கம்

**எம்மைப் பற்றி**

1 எம்மைப் பற்றி
2 நிறுவனம்
3 எமது பயணம்

**முக்கிய விடயங்கள்**

4 நிதிசார் முக்கிய விடயங்கள்
5 முக்கிய விடயங்களும் சாதனைகளும்

**மீளாய்வு**

6 தலைவரின் மீளாய்வு
7 பொது முகாமையாளரின் மீளாய்வு

**தலைமைத்துவம்**

9 பணிப்பாளர் சபை
10 நிருவாக கட்டமைப்பு
11 SWOT பகுப்பாய்வு
12 இடர்சார் விடயங்கள்

**நல்லாட்சி**

13 ஒருங்கிணைந்த ஆளுகை
15 கணக்காய்வு குழு அறிக்கை
16 பணிப்பாளர் அறிக்கை

**நிதிசார் கூற்றுக்கள்**

18 விரிவான வருமான கூற்று
19 நிதிநிலைமைக் கூற்று
20 உரிமை மாற்றல் கூற்று
21 காசுப் பாய்ச்சல் கூற்று
22 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
33 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை
39 ஒருங்கிணைந்த தகவல்
40 கூட்ட அறிவித்தல்

# எம்மைப் பற்றி

## நோக்கு

இலங்கையில் இரசாயன இறக்குமதி, உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் முன்னணி நிறுவனமாக விளங்குதல்.

## செயற்பணி

கைத்தொழில்சார் துறைகளின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான இரசாயனங்களை பொறுப்புடன் வழங்குதல், இறக்குமதி செய்தல் மற்றும் உற்பத்தி செய்தல், பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் சுற்றுப்புறச்சூழல் சார்ந்த பொறுப்பினை மேம்படுத்துதல்.

## விழுமியங்கள்

**பாதுகாப்பு**
பாதுகாப்பிற்கான நமது அர்ப்பணிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**பொறுப்புடமையும் நம்பகத்தன்மையும்**
நாம், நிலையான நடைமுறைகள் மற்றும் மாசு தடுப்பு மூலம் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பினைத் தணிக்கும் சுற்றுப்புறச்சூழல் தொடர்பில் பொறுப்புவாய்ந்த நிறுவனமாகும்.

**புத்தாக்கம்**
புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினுடாக புதிய தயாரிப்பு விருத்திக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

**தரம்**
எமது தயாரிப்புகள் தர நியமங்களுக்கமைவாக உள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு கடுமையான தரநியமங்கள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளுடன் இணங்குவதனை நாம் பின்பற்றுகிறோம்.

## இலக்குகள்

1. இலங்கையின் இரசாயன சந்தையில் பிரதான தொழிற்பாட்டாளராக மாறுதல்.

2. பரந்தனில் காஸ்டிக் சோடா / குளோரின் ஆலையினை மீளவும் ஆரம்பித்தல்.

3. கம்பனியின் பண்டக் குறியிடல் மற்றும் விழிப்புணர்வினை மேம்படுத்துதலும் புதிய உற்பத்தி விருத்தியுடன் கூடிய நுகர்வோர் சந்தையினை அடையப் பெறுதலும்.

4. உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களுக்கமைவாக இரசாயன கைத்தொழில் துறையின் ஒழுங்கமைப்பாளராக விளங்குதல்.

# நிறுவனம்

வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயன கம்பனியானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரசுக்கு சொந்தமான கம்பனியாகும். கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது. கம்பனியானது, நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட ஏனைய கொள்கை முடிவுகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

உள்ளூர் தொழில்துறைக்கு தேவையான முக்கிய இரசாயன கூறுகளாக திரவ குளோரின், காஸ்டிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் ஆகியவற்றை இறக்குமதி செய்து வழங்குவது நிறுவனத்தின் முக்கிய பணியாகும். நிறுவனம் சந்தையில் திரவ குளோரினின் பிரதான வழங்குனராக விளங்குவதுடன் ஏனைய இரசாயனத் தேவைகளில் சந்தைப் பங்கின் நியாயமான பகுதியைப் பெறுகின்றது.

1950 தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப தொழிற்சாலைகளில், வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் அரசாங்க இரசாயன தொழிற்சாலையாக 1954 ஆம் ஆண்டு பரந்தன் இரசாயன தொழிற்சாலை தாபிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையானது 1957 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் 1957 இல் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்டிருந்தது.

இத்தொழிற்சாலையானது காஸ்டிக் சோடா, திரவ குளோரின் ஆகியவற்றை முக்கிய தயாரிப்புகளாகவும், ஹைட்ரோகுளோரிக் அமிலம், ஜிங்க் குளோரைடு மற்றும் மேசை உப்பை துணைப் பொருட்களாகவும், உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தயாரித்திருந்தது. தற்போது, நிறுவனம் 900 கிலோகிராம் சிலிண்டர்களில் திரவ சொரைனை இறக்குமதி செய்து, 68 கிலோ சிலிண்டர்களில் மீண்டும் நிரப்பி அவற்றினை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குறிப்பிட்ட சில தளங்களுக்கு வழங்குகுவதுடன் சில சிறியளவிலான கைத்தொழில்ளர்களின் தேவைப்பாடுகளும் கம்பனியினால் நிறைவு செய்யப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளால் பரந்தன் தொழிற்சாலையின் செயற்பாடுகளை 1985 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதுடன், சவர்க்காரம், கடதாசி மற்றும் புடவை உற்பத்திகளுக்கான பல்வேறு பயன்பாடுகளுக்காகவும் தண்ணீரை சுத்திகரிக்கவும் காஸ்டிக் சோடா மற்றும் குளோரின் போன்றவற்றை இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததுடன் தற்போது, நாட்டின் இரசாயனத் தேவைகளானவை இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றன.. இதற்காக பெருமளவிலான அந்நியச் செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது. இரசாயனத் தொழிற்சாலை செயலிழந்ததன் காரணமாக, உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் திறமையான தொழிலாளர்களைப் உரிய முறையில் பயன்படுத்த முடியாது போனது.

பரந்தனில் உள்ள தொழிற்சாலை அழிக்கப்பட்டதன் பின்னர் பரந்தன் தொழிற்சாலையில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, பரந்தன் இரசாயன கம்பனியானது1991 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை பொது கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பிரதான தொழிற்பாடுகளாக திரவ குளோரின், காஸ்டிக் சோடா செதில்கள் மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் என்பவற்றினை இறக்குமதி செய்து விற்பனை செய்வதேயாகும்.

வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனியானது ஒரு இலாபம் ஈட்டும் நிறுவனமாகும், மேலும், வியாபார நடவடிக்கைளுக்கு மேலதிகமாக, நிறுவனமானது சிறியளவிலான சிலிண்டர்களில் திரவ குளோரினை மீள நிரப்பும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, சிலிண்டர்களை இறக்குமதி செய்தல் மற்றும் நிரப்புதல் ஆகியவற்றில் தரக் கட்டுப்பாடு மற்றும் தர உத்தரவாதத் திட்டத்தை நிறுவனம் பராமரிக்கின்றது. நிறுவனம் குளோரின் துறையைப் பொறுத்தமட்டில் சிறந்த நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளதுடன் இந்த அக்கறையில் வல்லுநர்கள் மற்றும் அறிவுள்ள ஊழியர்களால் நிறுவனம் வளப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பனியின் தலைமை அலுவலகமானது இல. 446, காலி வீதி, இரத்மலானையில் அமைந்துள்ளது. பரந்தனில் 227 ஏக்கர் நிலப்பரப்பு புதிய இரசாயன தொழிற்சாலையை நிருமாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. களுத்துறை கைத்தொழில் வலயத்திலுள்ள 2 ஏக்கர் நிலப்பரப்பில் குளோரின் நிரப்புவதற்கும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்த நிலம் தற்போது சில புதிய கைத்தொழில் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 டிசம்பர் 31 இலுள்ளவாறு, கம்பனியின் மொத்த ஊழியர்கள் 48 பேர்களாகும். கம்பனியானது கடந்த பல ஆண்டுகளாக வழக்கமாக வரி செலுத்தி வருவதுடன் தொடர்ந்து இலாபம் ஈட்டி, நிலையான விரிவாக்கத்தை உறுதி செய்துள்ளது.

# எமது பயணம்

**1954**

Paranthan Chemicals Factory was established in 1954 as a Government Chemical Factory, and naturally got its name from the location at Paranthan in Kilinochchi District, in the Northern Province.

**1957**

This factory had been confirmed under the name of Paranthan Chemicals Corporation in 1957 by the State Industrial Corporation Act No. 49 of 1957.

**1958**

As it had been set up to manufactured Caustic Soda and the Liquid Chlorine as main products and Hydrochloride Acid, Zinc Chloride and Table Salt as other by-products, using local raw materials, mainly Salt that was in abundance, were always in favour.

**1985**

Due to the terrorist activities that encroached into the production process after the year 1983, the operations of the Paranthan Factory could not be carried out normally any further and from the year 1985 onwards, its operation got affected.

**1986**

Then it has quietly transformed from its 'manufacturing base' into a trading environment and from that point onwards the company had to import Caustic Soda and Chlorine for the various application in manufacturing soap, paper, textiles and for purifying water.

**1991**

Incorporated on 17th January 1991 as a Public Limited Liability Company under the Conversion of Public Corporations or Government owned Business undertaking into Public Companies Act No. 23 of 1987.

**2009**

Established Kalutara Unit for Chlorine and other chemicals operation.

**2010**

Received Paranthan Land with a plan and received Ministry of Defense (MOD) Clearance Report.

**2012**

- Established Wagawatta Unite with Chlorine Scrubber System.
- Approved Cadre and Scheme of recruitment procedure of the Company.

**2013**

- Implementation of Bleaching powder Production Plant.
- Started to Fabrication & Supply of Steel Tool boxes for Emergency Kit A & B

**2015 - 2019**

- Established 20 acres Buffer Zone at Paranthan.
- Appointed Competent Authority to the Company.

**2021**

Completed feasibility study on Caustic Soda & Chlorine project at Paranthan.

**2022**

Technical proposal for the modification of Caustic Lye manufacturing process at Nagoda Unit.

**2023**

- Started to apply KPI procedure to the company.
- Launching of four new products to the Consumer Market.
- Sales promotion through Salacine Rupavahini Institute.
- Introduced disciplinary and administrative procedures to the Company.
- Paid Rs.300Mn to the Treasury in addition to the Dividends.

# நிதிசார் முக்கிய விடயங்கள்

| | 2023 ரூபா | 2022 ரூபா | 2021 ரூபா | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 770,359,782 | 721,807,561 | 395,462,175 | 306,585,103 | 287,168,845 |
| விற்பனைச் செலவு | (310,024,750) | (348,035,292) | (210,284,083) | (152,926,005) | (151,904,349) |
| மொத்த இலாபம் | 460,335,032 | 373,772,269 | 185,178,092 | 153,659,098 | 135,264,496 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 1,713,160 | 116,987,017 | 44,112,772 | 33,032,969 | 38,477,530 |
| | 462,148,192 | 490,759,286 | 229,290,863 | 186,692,066 | 173,742,026 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | (6,025,498) | (1,161,936) | (929,883) | (615,044) | (1,494,595) |
| நிருவாக மற்றும் தாபன செலவுகள் | (139,269,802) | (120,372,754) | (90,165,290) | (103,994,475) | (98,614,771) |
| நிதிச் செலவுகள் | (8,464) | (6,865,710) | (14,695) | (52,808) | (251,933) |
| வரிக்கு முந்திய இலாபம் | 479,965,540 | 362,358,886 | 138,195,691 | 82,029,740 | 73,380,727 |
| வரி விதிப்பனவு | (210,810,699) | (215,283,356) | (105,172,859) | (55,347,595) | (30,192,565) |
| காலப்பகுதிக்குரிய தேறிய இலாபம் | 270,158,011 | 147,075,530 | 33,008,136 | 26,682,144 | 43,188,162 |
| பங்குதாரர்களுக்கான பங்கிலாபம் | 81,000,000 | 44,000,000 | 10,000,000 | 8,000,000 | 3,000,000 |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 279,985,099 | 247,409,592 | 166,546,237 | 267,790,774 | 288,300,442 |
| முற்செலுத்திய குத்தகை காணி | 2,326,586 | 2,441,374 | 2,556,162 | 2,670,951 | - |
| குறைவேலை | 30,729,421 | 28,937,662 | 27,227,155 | 19,085,178 | 7,994,545 |
| நடைமுறை சொத்துக்கள் | 1,046,639,929 | 951,601,555 | 742,368,199 | 574,173,410 | 497,595,389 |
| மொத்த சொத்துக்கள் | 1,350,681,034 | 1,230,390,183 | 938,697,754 | 863,720,313 | 793,890,376 |
| **உரிமையும் பொறுப்புக்களும்** | | | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | | |
| விலைகூறப்பட்ட மூலதனம் | 40,000,000 | 40,000,000 | 40,000,000 | 40,000,000 | 40,000,000 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 384,722,194 | 655,044,077 | 544,269,974 | 629,219,799 | 622,160,262 |
| பங்குதாரர் நிதியம் | 665,171,184 | 695,044,077 | 584,269,974 | 679,219,799 | 662,160,262 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 465,674,230 | 399,905,140 | 237,138,149 | 115,283,519 | 72,119,865 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 219,835,620 | 135,440,966 | 117,289,631 | 69,216,994 | 59,610,248 |
| மொத்த உரிமையும் பொறுப்புக்களும் | 1,350,681,034 | 1,230,390,183 | 938,697,754 | 863,720,313 | 793,890,376 |

# முக்கிய விடயங்கள் மற்றும் சாதனைகள்

| | 2022 உண் மை ரூபா.'0 00 | 2023 உண் மைரூ பா.'000 | 2024 மதிப்பீடு ரூபா.'000 |
|---|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 278,789 | 304,041 | 329,720 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 951,602 | 1,046,640 | 1,060,000 |
| மொத்த சொத்துக்கள் | 1,230,391 | 1,350,681 | 1,389,270 |
| உரிமையும் பொறுப்பும் | | | |
| மூலதனமும் ஒதுக்கமும் | | | |
| பங்குதாரர் நிதியம் | 695,044 | 665,171 | 850,275 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 399,905 | 465,674 | 270,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 135,441 | 219,836 | 268,995 |
| மொத்த உரிமையும் பொறுப்புக்களும் | 1,230,390 | 1,350,681 | 1,389,270 |
| வருமானம் | 721,808 | 770,360 | 950,000 |
| விற்பனைச் செலவு | (348,035) | (310,025) | (442,500) |
| மொத்தச் செலவு | 373,773 | 460,335 | 507,500 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 16,184 | 1,713 | 2,500 |
| | 389,957 | 462,048 | 510,000 |
| தொழிற்பாட்டிலிருந்தான இலாபம் | 268,422 | 316,753 | 354,241 |
| வரிக்கு முந்திய இலாபம் | 362,359 | 479,965 | 440,641 |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 147,076 | 270,158 | 263,951 |
| பங்கொன்றிற்கான சம்பாத்தியம் (ரூபா.) | 36.77 | 67.54 | 65.99 |
| பங்கொன்றிற்கான பங்கிலாபம் (ரூபா.) | 11.00 | 20.25 | 19.79 |

# தலைவரின் மீளாய்வு



வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பெனி என்பது நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படும் அரசுக்கு சொந்தமான இலாபம் ஈட்டும் நிறுவனம் ஆகும்.

இரசாயன உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள தொழில்சார் ரீதியாக நிருவகிக்கப்படும் நிறுவனமாக, நீர் சுத்திகரிப்பு மற்றும் உள்ளூர் உற்பத்தித் தொழில்களுக்கு தேவையான இரசாயனங்கள் கிடைப்பதை உறுதி செய்வதில் நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கின்றது. நிறுவனத்தின் தேசிய இலக்குகளில் பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான தேசியத்தை வளர்ப்பது, முதன்மை இரசாயனத் துறையில் அரசாங்க செயற்பாட்டில் இருப்பை உறுதி செய்தல் மற்றும் இரசாயனங்கள் கையாளுதலில் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காணுதல் என்பன உள்ளடங்குகின்றன.

தற்போது இந்நிறுவனம் தேசிய சந்தையில் திரவ குளோரினுக்கான பிரதான வழங்குனராக விளங்குவதுடன் ஏனைய இரசாயனங்களில் நியாயமான சந்தைப் பங்கினையும் பெற்றுள்ளது. உள்நாட்டு உப்பு உற்பத்திக்கு பெறுமதி சேர்க்கும் காஸ்டிக் சோடா, குளோரின் மற்றும் அதனுடன் தொடர்புடைய இரசாயனங்களை உற்பத்தி செய்த வரலாற்றைக் கொண்ட ஒரு நிறுவனமாக விளங்கும் வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயன நிறுவனமானது பரந்தனில் தொழிற்சாலையை மீண்டும் நிறுவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கும் போது, தற்போதைய கொள்கைச் சூழலுக்குள் அது நிலையானதாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். ஒட்டுமொத்த முகாமைத்துவ மற்றும் பொறியியல் அனுபவம் பெறப்பட்டுள்ளது, மேலும் அதன் பண்டப் பெயருக்கு கிடைக்கும் நன்மை, எதிர்கால விரிவாக்கத்திற்கான அடித்தளமாக விளங்கும். தற்போதைய செயல்முறைப்படுத்தும் சூழலுக்குள் அது போன்ற வளர்ச்சிக்கான விருப்பமும் திறனும் அவசியமாக உள்ளது.

கம்பனியானது தனது சொந்த நிதியில் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்கலான இலாப நோக்கற்ற செலவினங்களுடன் இயங்கி வருகின்றது என்பதைக் குறிப்பிடுவது மிகவும் தகுதியானதாகும். பொது திறைசேரியின் பங்கிலாப தொகைக்கு வருடாந்த பங்களிப்பும் செலுத்தப்படுகின்றது. மேலும், பதவியினரின் நலனுக்காக, விரிவான காப்புறுதி திட்டமும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வருடாந்த அறிக்கையானது, 2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் முக்கியமான பணிகள் குறித்த முக்கியத் தகவல்களையும் உள்ளடக்குகின்றது. மேலும், வளர்ச்சியை அடைவதற்கான முயற்சியில் நிறுவனத்தின் திறன்கள் மற்றும் தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இது வெளிக் கொணருகின்றது.

**நன்றி நவிலல்**

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது கம்பனிக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காகவும் கம்பனிக்கும் எனக்கும் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்களுக்கமாக அதிமேதகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், கௌரவ. அமைச்சர், நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் ஊழியர்கள் மற்றும் பொது திறைசேரியின் செயலாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
வெளியக கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்துக்கும் அவர்கள் வழங்கிய அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது சிரேஷ்ட முகாமைத்துவம், பதவியினர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகின்றேன். எமது கம்பனியானது அவர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புமிக்க சேவையின் மூலமாக தடையற்ற தொடர்ச்சியான முன்னேற்றத்தினை உறுதி செய்துள்ளதுடன் வெற்றியினை நோக்கியதான சாதகமான போக்கினை நோக்கி முன்னேறிச் செல்கின்றது.
எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் முன்மாதிரியான ஆதரவு இல்லாமல் நிறுவனம் நிலைத்திருக்காது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அவர்களுக்கும் அவ்வாறே 2023 ஆம் ஆண்டிலும் தமது நிபந்தனையற்ற ஆதரவையும் சேவைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கி ஆதரவளித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



எ.எம்.டி.சமிந்த கருணாரத்ன
தலைவர்

# பொது முகாமையாளரின் மீளாய்வு



**செயற்பாடுகள் / கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள்**

வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி என்பது கிளிநொச்சி மாவட்டம் பரந்தனில் அமைந்துள்ள பிரதான உற்பத்தித் தொழிற்சாலையாகும், இது 1956 முதல் 1985 வரை வெற்றிகரமாக இயங்கி வந்துள்ளது. 1985 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக எமது உற்பத்தி நிலையம் அழிக்கப்பட்டதுடன் தற்போது அதனை மீண்டும் நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கம்பனியானது, காஸ்டிக் சோடா மற்றும் குளோரின் தொழிற்சாலையினை மீண்டும் நிறுவுவதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வினை நிறைவு செய்துள்ளது.

வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயன கம்பனி என்பது கணிசமான இலாபம் மற்றும் சேவை வளர்ச்சி விகிதத்துடன் சுயமாக இயங்கும், இலாபம் சார்ந்த அரச நிறுவனமாகும். நாங்கள் இலங்கை சுங்கத்தால் “இணக்கமான பொருளாதார தொழிற்பாட்டாளர் (CEO)” நியமங்களை வழங்கியுள்ளோம். இதன் மூலம் எமது பண்டசார் நடவடிக்கைக்கு பசுமை வழிமுறை சார்ந்த வசதியினைப் பயன்படுத்த முடியும்.

கம்பனியானது உற்பத்தி மனப்பான்மையுடன் தொழிற்பட்டு வருவதுடன் சாத்தியமான இரசாயன உற்பத்தித் தொழில்களை உருவாக்குவது தொடர்பில் மூலோபாய ரீதியாக கவனம் செலுத்தி வருகின்றது.

கம்பனியினால் ஆரம்பிக்கப்பட்ட குளோரின் சிலிண்டர் பராமரிப்பு மற்றும் அழுத்த சோதனையின் பொறியியல் பிரிவு, டொலர்களை மாற்றுவதைத் தவிர்ப்பதற்காக வாகவட்டா வசதிப்படுத்தலினைக் கொண்டுள்ளது. மேலும் இரசாயன விபத்துகளைத் தடுக்கும் பாதுகாப்பு உபகரணக் கருவிகளை நாங்கள் தயாரிக்கிறோம். மேலும், இரசாயன பேரிடர் முகாமைத்துவத்துக்கு எதிராக நாட்டுக்கு செயன்முறைப் பயிற்சித் திட்டங்களையும் நடாத்தி வருகின்றோம். 2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகள் மற்றும் வருமான மூலங்களாக, திரவ குளோரின், காஸ்டிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் ஆகியவற்றின் விற்பனை மட்டுமே விளங்குகின்றன. மீளாய்வு ஆண்டின் புரள்வு ரூபா.770 மில்லியனாக உள்ளது, இது முந்தைய ஆண்டை விட 50% அதிகமாகும். ஆனால், மீளாய்வு ஆண்டில் வைப்புத்தொகைக்கு குறைந்த வட்டி விகிதங்கள் கிடைத்ததால், முந்தைய ஆண்டை விட சற்று குறைவாக ரூபா.479 மில்லியன் வரிகளுக்கு முந்தைய இலாபத்தை மட்டுமே நிறுவனம் அடைய முடிந்துள்ளது.

இந்த ஆண்டும் கம்பனியின் மொத்த வருமானம் முக்கியமாக திரவ குளோரின் மூலம் வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் காஸ்டிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தின் எதிர்பார்த்த விளைவை அடைய முடியவில்லை. குறைந்த விலைப் போட்டியின் காரணமாக சந்தைப் போட்டியே மேற்கூறிய பின்னடைவுக்கான முக்கிய காரணமாகும். பரந்தன் இரசாயன கம்பனியானது அதன் சொந்த திறமைகளையே நம்புகின்றது வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயன கம்பனியானது, 2024 ஆம் ஆண்டில் தயாரிப்பு துறைக்கு மாற்றப்படும் போட்டி வர்த்தக நிறுவனமாக சந்தையில் புதிய தயாரிப்புகளைச் சேர்ப்பதன் மூலம் கீழ்நிலை முடிவுகளைக் காண்பிப்பதன் மூலமும் அதன் தயாரிப்பு துறையினைத் தொடர்ந்து மேம்படுத்துவதன் மூலமும் சொந்தத் திறன்களை நம்பி வருகின்றது.

**குளோரின் பாதுகாப்பான பயன்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை**

இந்த சம்பவத்திற்குப் பிறகு, இறக்குமதியிலிருந்து இறுதிப் பயனர் வரை குளோரின் கையாளுதலின் ஆபத்து காரணிகள் குறித்து நிறுவனம் ஆழமான பகுப்பாய்வு செய்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உட்பட பாதுகாப்பு நடவடிக்கைகளின் படிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஹொரணையில் உள்ள வகவத்த முதலீட்டுச் சபையில் 2 1/2 ஏக்கர் காணியைப் பெற்று, புதிய ஸ்க்ரப்பர் முறைமையுடன் பண்டகசாலைக் கட்டிடங்களை நிருமாணிக்க முடிந்துள்ளதுடன் நிருமாணப் பணிகளை நிறைவு செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது. வாகவத்த, ஹோராவில் உள்ள எங்களின் குளோரின் மீள் நிரப்பு ஆலையின் சமீபத்திய ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமைகளுடன் மற்றும் சுத்திகரிப்பு திரவம் மற்றும் சுத்திகரிப்பு பவுடருடன் நாட்டிற்குத் தேவையான திரவ குளோரின் மற்றும் அதனுடன் தொடர்புடைய இரசாயனங்கள் பூர்த்தி செய்யப்படுவதால்உற்பத்தி மற்றும் விற்பனை தொகைகள் அதிகரித்து வருகின்றன.

அனைத்து 900 கிலோ சிலிண்டர்களும் வழங்குனர்களினால் முறையாக ஆய்வு ஆய்வு செய்யப்பட்டு செய்யப்பட்டு சர்வதேச தரங்களுக்கு இணங்கவில்லை என பரிசோதிக்கப்பட்டு அந்தந்த நாடுகளின் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் இதற்காக 68 கிலோ உள்நாட்டில் பரிசோதி. முழு குளோரின் செயல்பாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் ஆபத்துகளில் இருந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ரூபா.20 மில்லியன் பொதுப் பொறுப்புக் காப்பீட்டுத் தொகையை கம்பனியானது பெற்றுள்ளது. அத்துடன், கமபனியின் ஊழியர்கள், நீர் வழங்கல் சபை தளங்களின் பணியாளர்கள் மற்றும் ஏனைய திரவ குளோரின் பயன்பாட்டாளர்களுக்கு திரவ குளோரின் பயன்பாடு தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதில் உள்ள ஆபத்தைத் தணிப்பதற்கு புதிய பாதுகாப்பு கருவிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**நிதிப் பிரிவு**

நிறுவனத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான தகவல்களை பணிப்பாளர் சபைக்கும் வரிசை அமைச்சுக்கும் திறைசேரிக்கும் குறித்த பிரிவால் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சிக்கிய செயல்பாடுகள் குறித்தும் அறிக்கையிடப்படுகின்றன.

எதிர்பார்த்த அளவிலான இலாபத்தை அடைவதற்காக, நிதிப் பிரிவானது ஏனைய பிரிவுகளுக்குத் தேவைப்படும் போதெல்லாம் உதவிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது. நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகளை கடைபிடிப்பது, சட்டப்பூர்வ தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்தல், வெளி நிறுவனங்களுடன் பொருத்தமான உறவுகளைப் பேணுதல் ஆகியவை 2023 ஆம் நிதியாண்டில் கம்பனியின் ஒட்டுமொத்த சாதனைக்கும் தமது பங்களிப்பினை வழங்கியுள்ளன.

**சந்தைப்படுத்தல் பிரிவு**

நிறுவனத்தின் விற்பனை மற்றும் விநியோக நடவடிக்கைகள் சந்தைப்படுத்தல் பிரிவால் கையாளப்படுகின்றன. உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) மற்றும் மூன்று முகாமைத்துவ உதவியாளர் தர ஊழியர்களால் இந்தப் பிரிவு தலைமை தாங்கப்படுகின்றது. இப்பிரிவு முக்கியமாக திரவ குளோரின், காஸ்டிக் சோடா, ஹைட்ரோகுளோரிக் அமிலம் மற்றும் ப்ளீச்சிங் திரவம் ஆகியவற்றை உள்ளூர் சந்தைக்கு சந்தைப்படுத்துகின்றது. வாடிக்கையாளர்களுடனான தயாரிப்புகளின் தேவை சரியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, இருப்புக்களின் அளவை போதுமான அளவில் பராமரிக்கப்படுகின்றது. போட்டி விலைகள் அவ்வப்போது சரிபார்க்கப்பட்டு, அதற்கேற்ப கம்பனியின் விலைகள் நிர்ணக்கப்படுகின்றன

**வழங்கல் பிரிவு**

வழங்கல் பிரிவு முக்கியமாக நிறுவனத்தின் பெறுகைகள் செயல்முறையை உள்ளடக்குகின்றது. இப்பிரிவில் நிறைவேற்றத் தரத்திலான உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் ஐந்து முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளனர். மீளாய்வு ஆண்டில், பிரிவினர் வழங்குனர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இறக்குமதிக்கு குறைந்த விலையைப் பெற்றுள்ளனர். இது நிறுவனத்தின் இலாபத்திற்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

**நிருவாக பிரிவு**

கம்பனியின் நிருவாகப் பிரிவு, நிறுவனத்தின் மிகப்பெரிய பிரிவுகளில் ஒன்றாகும். குறித்த பிரிவானது இரண்டு நிறைவேற்று உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளது. ஊழியர்களின் சட்டப்பூர்வ கொடுப்பனவுகள், தினசரி வருகைப் பதிவுகள், பங்குதாரர்களுடன் கடிதப் பரிமாற்றங்களைத் தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல், போக்குவரத்து நடவடிக்கைகளைக் கையாளுதல் மற்றும் கட்டிடம் மற்றும் வளாகத்தினைப் பராமரித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய இற்றைப்படுத்தப்பட்ட பதிவுகளை பேணுதல் உள்ளடங்கலான நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிருவாகம் சார்ந்த செயற்பாடுகளை இந்த பிரிவு நிருவகித்து வருகின்றது.

**ஹொரண மற்றும் களுத்துறையிலுள்ள மீள் நிரப்பும் பிரிவு**

ஹொரண மற்றும் களுத்துறை மீள் நிரப்பும் பிரிவானது இரண்டு நிறைவேற்று தர உத்தியோகத்தர்கள், ஆறு முகாமைத்துவ உதவியாளர்கள் ஒரு முன்னோடி மற்றும் பன்னிரெண்டு மனிதவலு மற்றும் தொழிற்பாட்டு தர ஊழியர்களுடன் பிரதி பொது முகாமையாளர் (பொறியியல்) ஒருவரின் மேற்பார்வையின் கீழ் குறித்த பிரிவானது நிருவகிக்கப்படுகின்றது. குறித்த பிரிவு முகாமையாளர்கள் 68 கிலோ நிறையுடைய சிலிண்டர்களின் ஒட்டுமொத்த பராமரிப்புப் பணி, பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், பாதுகாப்பு உபகரணங்களை ஒருங்கிணைப்பு செய்தல். போன்ற ஒட்டு மொத்த பணிகளையும் மேற்பார்வை செய்கின்றனர். 2023 ஆம் ஆண்டில், குறித்த பிரிவானது மிகவும் திருப்திகரமாக செயற்பட்டுள்ளது.

**நன்றி நவிலல்**

கம்பனிக்கு தமது அயராத பங்களிப்பினையும் ஆதரவினையும் வழங்கியமைக்காக பரந்தன் இரசாயன கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு இவ்விடத்தில் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஒரு சவாலான சூழலில் கம்பனியின் ஊழியர்களினால் வழங்கப்பட்ட கடின உழைப்பு, திறமைகள், அவர்களின் படைப்புத்திறன் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிற்கு கம்பனியின் சார்பாக எனது நன்றியை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக இதனைக் கருதுகின்றேன்.



லெப்டினன்ட் கொமாண்டர். ஜீவானந்த விஜேசுந்தர (ஓய்வு)
இலங்கை கடற்படை
பொது முகாமையாளர்

# பணிப்பாளர் சபை



எஸ்.எம்.டி.சமிந்த கருணாரத்ன
**தலைவர் மற்றும் பணிப்பாளர் (நிறைவேற்று)**



திருமதி.ஜே.பி.பிரியங்கனி
**நிறைவேற்றுத்தரமல்லா பணிப்பாளர்**



திரு.பி.ஆர்.மதிஹாவெவ
நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளர்



திர.எஸ்.போதிவல
நிறைவேற்றுத்தரமல்லா பணிப்பாளர்



திரு.எஸ்.அமரவீர
நிறைவேற்றுத்தரமல்லா பணிப்பாளர்



திரு.டி.கே.சுமணதாச
நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளர்



திரு.எச்.எல்.விபுல சில்வா
சபைச் செயலாளர்



Chairman and Board of Directors
General Manager
Internal Auditor
Deputy General Manager
Deputy General Manager (Engineering)
Assistant General Manager (Administration)
Assistant General Manager (Supplies)
Assistant General Manager (Finance)
Assistant General Manager (Marketing)
Assistant General Manager (Engineering)
Engineer (Project and Development)
Administrative Officer
Stores Officer
Supplies Officer
Accounts Officer
Marketing Officer
Technical Officer
Management Assistant
Foreman
Diver Cum Office Aide
Office Aide

# SWOT பகுப்பாய்வு

**S**
**பலம்**

- அரச உரித்துடமை
- இரசாயன கைத்தொழிலில் 50 ஆண்டுகளுக்கும் மேலான அநுபவம்
- குளோரின் விநியோகத்தில் சந்தை தலைமைத்துவம் மற்றும் சுத்திகரிப்பு திரவம் மற்றும் கோஸ்டிக் சோடா திரவ சந்தைப் பங்கின் கணிசமான சதவீதம்
- விசேட மற்றும் அநுபவம் வாய்ந்த முகாமைத்துவம் மற்றும் பதவியினர்.
- நிதி, ஸ்திரத்தன்மை மற்றும் இலாபம் ஈட்டும் அரசுக்குச் சொந்தமான நிறுவனம்.
- ஏ - 9 வீதியில் பெரும் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. வடக்கு புகையிரதப் பாதையானது நிலப்பரப்பினை ஊடறுத்து காங்கேசன்துறை துறைமுகத்தினை நோக்கி செல்கின்றது.. (ஏறக்குறைய 64 ஹெக்ரேயர்)

**W**
**பலவீனம்**

1. பிரதானமாக இரசாயன இறக்குமதிகளினைச் சார்ந்துள்ளது. இவை பெரும்பாலும் பிராந்திய பிராந்திய பிரச்சனைகள் / சவால்களினால் பாதிக்கப்படுகின்றன.
2. பாரிய கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான நிதி பற்றாக்குறை.
3. நாடு முழுவதும் போதிய விநியோகம் காணப்படாமை.
4. அரசாங்க நடைமுறைகள் (ARS மற்றும் FRS) உறுதியாக பின்பற்றுவதானது வர்த்தக செயற்பாடுகள் மற்றும் தீர்மானம் நிறைவேற்றும் நடவடிக்கைகளினைத் தடுக்கின்றது.
5. போட்டியில்லா விலையிடல் கொள்கை.

**O**
**வாய்ப்புக்கள்**

- இலங்கையில் கோஸ்ரிக் சோடா மற்றும் குளோரின் தொழிற்சாலையானது கிடைக்கப் பெறாமை.
- இரசாயன உள்ளீடுகளினைப் பயன்படுத்தும் தயாரிப்பு கைத்தொழில்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு கருத்திட்டங்களின் சாத்தியமான வளர்ச்சி.
- வட மாகாணத்தில் காணப்படும் அதீத வேலையின்மை.
- நாட்டில் காணப்படும் அரசியல் ஸ்திரத்தன்மை
- உப்பு, சுண்ணாம்பு, மணல் மற்றும் கனிய வளங்கள் போன்ற மூலப்பொருட்கள் எளிதாக கிடைக்கப் பெறுகின்றமை.

**T**
**அச்சுறுத்தல்கள்**

1. பிராந்தியத்தில் உள்ள வழங்குனர்கள் மற்றும் உள்ளூர் வழங்குனர்களிடமிருந்தான போட்டி.
2. இரசாயனப் பொருட்களினை இறக்குமதி செய்வதற்கு தனியார் கம்பனிகளுக்கு சுதந்திரமளித்தல்.
3. கம்பனிக்கு எவ்வித ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரங்களும் உரித்தளிக்கப்படவில்லை.
4. விலை உணர்வினைமை காரணமாக சந்தைப் பங்குகளில் சாத்தியமான குறைப்பு.
5. அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதில் ஏற்றுக் கொள்ள முடியாத தாமதங்கள்.
6. கைத்தொழில்களுக்காக இமிச இனால் அதிகூடிய மின்சார கட்டணங்கள் அறவிடப்படுகின்றமை.
7. உயர் கடன் வட்டி வீதங்கள்
8. அந்நியச் செலாவணி தளம்பல் நிலை காரணமாக எதிர்கால

# இடர்சார் விடயங்கள்

கம்பனியின் அன்றாட வர்த்தக செயற்பாடு மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான தொழிற்பாடு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு அச்சுறுத்தல் சார்ந்த விடயங்களை கம்பனியானது அடையாளம் கண்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்டவாறு, அடையாளம் காணப்பட்ட இடர் நிறைந்த விடயங்கள் தொடர்பில் எதிர்பாராத திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**தணிப்பு பிரச்சனைகள் சார் இடர்கள்:** இரசாயனங்கள் கசிவுகள் அல்லது வேறு ஏதேனும் ஆபத்துகள் காரணமாக சட்ட மற்றும் சுற்றுப்புறச்சூழல் சார்ந்த சிக்கல்களுக்கான சாத்தியப்பாடு.

தணிப்பு திட்டம்:

கம்பனியானது, சாத்தியமான கசிவுகளின் தாக்கத்தைத் தணிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1. சிலிண்டர்களின் சோதனை அவ்வப்போது செய்யப்படுகிறது.
2. குளோரின் வால்வுகள் மற்றும் சிலிண்டர்களின் முறையான பேணுகை.
3. ஏதேனும் கசிவுகளைத் தடுக்கும் பொருட்டு இரவு மற்றும் விடுமுறை நாட்களில் தொழிற்படுவதற்கு எமது வேலைத் தளத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
4. வாடிக்கையாளர்களுக்கான அவசரகால பாதுகாப்புக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
5. வாடிக்கையாளர்களுக்கு அவசரகால பாதுகாப்பு கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது சாத்தியமான கசிவுகளைத் தடுப்பதற்கு பயன்படுகின்றது.
6. துறைமுகத்தில் இருந்து இறுதிப் பயனர்கள் வளாகம் வரை குளோரின் செயல்பாட்டின் முழு சுற்று வட்டத்தையும் உள்ளடக்கியதற்காக தயாரிப்பு பொறுப்புக் காப்பீட்டுடன் கூடிய பொதுப் பொறுப்புக் காப்பீடு எடுக்கப்பட்டுள்ளது.

**புத்தாக்க பிரதியீட்டு இடர்கள்**: திரவ குளோரின், காஸ்டிக் சோடா மற்றும் HCL ஆகியவற்றிற்கான புதிய மற்றும் புத்தாக்க பிரதியீட்டு தயாரிப்புகளின் அறிமுகம். போட்டியாளர்கள் தமது தயாரிப்பு தரம் மற்றும் அம்சங்களையும் மேம்படுத்துகின்றனர்.

தணிப்பு திட்டம்:

1. திரவ குளோரின், காஸ்டிக் சோடா செதில்கள் மற்றும் பிற இரசாயனங்களுக்கு குறைந்த இலாப எல்லையுடன் கூடிய குறைந்த விலை மட்டங்களைப் பேணுதல்.
2. கம்பனியானது இரசாயன சந்தையில் புத்தாக்கங்களுக்கு இணையான பிரதியீட்டு தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

# ஒருங்கிணைந்த நல்லாட்சி

பரந்தன் இரசாயனக் கம்பனியானது, கார்ப்பரேட் ஆளுகைப் பகுதியில் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளது. பங்குதாரர்கள் மற்றும் ஏனைய அக்கறைதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நபர்களை உள்ளடக்கிய கார்ப்பரேட் ஆளுமை உள் அமைப்பு. நல்ல நிர்வாகம், வணிகத்தின் திறமையான மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டை எளிதாக்குகிறது, அதே நேரத்தில் வணிக நெறிமுறைகளின் உயர் மட்டத்தை பராமரிக்கிறது மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் மதிப்பை மேம்படுத்துகிறது. சிறந்த கார்ப்பரேட் ஆளுகையானது வெளிப்புற சந்தைப் பொறுப்பு மற்றும் சட்டம் மற்றும் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளைப் பாதுகாக்கும் ஆரோக்கியமான சபை கலாச்சாரம் ஆகியவற்றை நம்பியுள்ளது. மேலும், கம்பனி முகாமைத்துவத்தின் முக்கிய அங்கம் ஒரு நிறுவனத்தில் சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பொறுப்புணர்வை உறுதி செய்வதாகும்.

கூட்டிணைவு நிறுவன ஆளுகை அறிக்கை, கணக்காய்வுக் குழு அறிக்கை மற்றும் பணிப்பாளர்கள் அறிக்கையுடன், பரந்தன் இரசாயனக் கம்பனியானது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டம் மற்றும் இலங்கை சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி, இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கையில் உள்ள சிறந்த பயிற்சி நிறுவனங்களின் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டிணைவு நிறுவனத்தின் சிறந்த நடைமுறைக் கோட்பாட்டிற்கு இணங்குவதற்கான விளக்கத்தை வழங்குகின்றது.

**பணிப்பாளர் சபை**

கம்பனியின் வெற்றிக்கு பணிப்பாளர் சபையானது கூட்டாகப் பொறுப்பு வாய்ந்ததாகும். அதன் தொழிற்பாடு, கம்பனிக்கு தொழில் முனைவோர் தலைமைத்துவத்தை விவேகமான மற்றும் பயனுள்ள கட்டுப்பாடுகளின் அடிப்படையில் கட்டமைப்பிற்குள் வழங்குவதாகும், இது இடரினை மதிப்பிடவும் நிருவகிக்கவும் உதவுகின்றது. சபையானது கம்பனியின் மூலோபாய நோக்கங்களை தாபிக்கின்றது, அதன் நோக்கங்களை பூர்த்தி செய்ய தேவையான நிதி மற்றும் மனித வளங்கள் உள்ளனவா என்பதை உறுதி செய்வதுடன் நிருவாக செயல்திறனை மதிப்பாய்வு செய்கிறது. இது நிறுவனத்தின் பெறுமதிகள் மற்றும் நியமங்களை நிறுவுவதுடன் அதன் பங்குதாரர்கள் மற்றும் ஏனையோருக்கு அதன் கடமைகள் புரிந்து கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்கிறது. பணிப்பாளர் சபைக்கு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பொறுப்புகள் பின்வருமாறு:

- பங்குதாரர் மதிப்பை அதிகரித்தல்
- கூட்டிணைவு குறிக்கோள்கள், வரவு செலவுத் திட்ட மற்றும் எதிர்வுகூறல்களை மீளாய்வு செய்தல்
- தொழிற்பாட்டு மற்றும் செயற்பாட்டு செயல்திறன்களை மீளாய்வு செய்தல்
- மூலதன முதலீட்டு விருப்பத் தேர்வுகளை ஆரம்பித்தல்.
- உள்ளக கட்டுபாட்டு முறைமை வினைத்திறனுடன் செயல்படுத்துவதை உறுதி செய்தல்
- உயர்ந்த நெறிமுறைகள் மற்றும் நியமங்கள் சட்டத்துடன் இணங்குவதை உறுதி செய்தல்
- வருடாந்த நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்குதல்
- பங்குதாரருக்கான பங்குலாபங்களை பரிந்துரை செய்தல்

பணிப்பாளர் சபையானது ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, அவர்களில் ஐந்து பேர் நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்கள் ஆவர். பணிப்பாளர்களின் பெயர்களும் பதவி நிலைகளும் பின்வருமாறு.

**பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்**

நிறுவனம் மாதாந்தம் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துகின்றது, மேலும் சிறப்பு வர்த்தகத்தை பரிவர்த்தனை செய்வதற்காக தேவையான விசேட பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், 15 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்**

பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், செயல்பாட்டு சிக்கல்கள் மற்றும் தீர்வுகளைக் ஊழியர்களின் நலனுக்காக செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வளங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் நிதி மற்றும் செயல்பாட்டு செயல்பாடுகள் தொடர்பான தற்போதைய முறைமை மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு குழு பொறுப்பு வகிப்பதுடன் பணிப்பாளர் சபைக்கு குறித்துரைக்கின்றது.

**பதவிக் காலம், ஓய்வு மற்றும் பணிப்பாளர்களை மீளவும் தெரிவு செய்தல்.**

ஒவ்வொரு வருடாந்த பொதுக் கூட்டத்திலும் தற்போதைக்கு மூன்றில் ஒரு பங்கு பணிப்பாளர்கள், அல்லது அவர்களின் எண்ணிக்கை மூன்றின் பெருக்கமாக இல்லாவிட்டால், மூன்றில் ஒரு பங்கிற்கு அண்மித்த (ஆனால் அதற்குக் குறையாத) எண்ணிக்கையிலானவர்கள், ஓய்வு பெற்று, மீண்டும் தேர்தலை நடாத்துதல் வேண்டும். பங்குதாரர்கள். ஒவ்வொரு அடுத்த ஆண்டும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தற்போதைக்கு மூன்றில் ஒரு பங்கு பணிப்பாளர்கள் அல்லது அவர்களின் எண்ணிக்கை மூன்று அல்லது மூன்றின் பெருக்கமாக இல்லாவிட்டால், மூன்றில் ஒரு பங்கிற்கு அண்மித்து உள்ளவர்கள் பதவியில் இருந்து ஓய்வு பெறுவார்கள்.

**கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்**
கணக்காய்வுக் குழு உள்ளக கட்டுப்பாடு மற்றும் சரிபார்த்தல் முறைமைகளினை மதிப்பாய்வு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது, இது பயனுள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் பரவலுக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. குழுவில் மூன்று நிறைவேற்றுத்தரமல்லா உறுப்பினர்களை உள்ளடங்குவதுடன் நிறுவனத்தின் ஒரே பங்குதாரராக திறைசேரியால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நிறைவேற்றுத்தரமல்லா பணிப்பாளரால் தலைமை தாங்கப்படுகின்றது. குழுவானது உள்ளக கணக்காய்வாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் கம்பனி முகாமைத்துவத்தின் உறுப்பினர்களின் பிரதிநிதிகளை புதிய அம்சங்களின் அறிமுகமாக அழைக்கின்றது. ஊழியர்களின் நலனுக்காக செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வளங்களி... உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் நிதி மற்றும் செயல்பாட்டு செயல்பாடுகள் தொடர்பான தற்போதைய முறைமை மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு குழு பொறுப்பு வகிப்பதுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றது.

**கணக்காய்வு**

கணக்காய்வு குழுக் கூட்டத்திற்கு வருகை தந்தோர் - 2023

**கலந்து கொண்ட கூட்டங்களின் எண்.**

| | |
|---|---|
| திருமதி.ஜே.பிரியங்கனி<br>நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளர் | 04 |
| திரு.எஸ்.அமரவீர<br>நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளர் | 04 |
| திரு.சுனில் பொட்டிவல<br>நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளர் | 03 |

**உள்ளக கட்டுப்பாடு**
பங்குதாரர்களின் முதலீடுகளின் மதிப்பு மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான சவுண்ட் சிஸ்டம்மோ.:.பைன்டர்னல் கண்ட்ரோலைப் பராமரிப்பதற்கான அதன் ஒட்டுமொத்தப் பொறுப்பை சபையானது பொறுப்பேற்கின்றது. குழுவின் கொள்கையானது, திறமையான மற்றும் பொருத்தமான முறையில் இடரினை முகாமை செய்யும் நிறுவனத்தின் திறனை மேம்படுத்தும் முறைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவனம் எதிர்கொள்ளும் இடர்களினைக் கண்டறிந்து, மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணித்து அவற்றை எவ்வாறு முகாமை செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கான பொறுப்பை கணக்காய்வுக் குழுவிடம் வழங்கியுள்ளது.

**நிதிக் கூற்றுக்களினைச் சமர்ப்பித்தலும் தொடர்புடைய வெளிப்படைத்தன்மையும் பொறுப்புடமையும்.**
நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS) இணங்கத் தயாரிக்கப்படுகின்றன. வெளியக கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு தேவையான அனைத்து தகவல்களும் பதிவுகளும் வழங்கப்பட்டுள்ளன. சிரேஷ்ட முகாமைத்துவத்தால் .அவர்களுக்கு சுதந்திரமாக கணக்காய்வினை மேற்கொள்வதற்கும் கணக்குகள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குமான சூழல் எற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒழுக்காற்று விதிகள்**
அனைத்து ஊழியர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தை வழிகாட்டல் ஒழுக்க விதிகள் உள்ளன. ஒழுங்குமுறை விதிகளின் முக்கிய கூறுகள் பின்வருமாறு.

- அனைத்து செயல்களிலும் நேர்மை, நேர்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மை.
- விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிந்து அதற்குக் கீழ்ப்படிதல்.
- கையாளப்படும் அனைத்து விடயங்களிலும் இரகசியம்.
- கம்பனியினை மோசமாகப் பிரதிபலிக்கும் அல்லது பாதிக்கக்கூடிய நடத்தையைத் தவிர்த்தல்

**நிதிசார் வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மை**
நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 2007 ஆம் அண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைவாக தயாரிக்கப்படுகின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் கம்பனியின் வெளியக கணக்காய்வாளர்களாக தொழிற்படுகிறது. கணக்காய்வாளர்கள் கம்பனியின் நிதிநிலை அறிக்கைகள் குறித்த கருத்தை தெரிவிக்க, கம்பனியின் முகாமைத்துவம் அல்லது பணிப்பாளர் சபையின் தலையீடு இல்லாமல் சுயாதீனமாக செயல்பட அனுமதிக்கப்படுகிறார்கள். கணக்காய்வாளர்களுக்கு ஆய்வுக்கு தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்படுகின்றன.

**நெறிமுறை நியமங்கள்**
நல்லாட்சி மற்றும் ஊழியர்கள் நியாயமாகவும், நேர்மையாகவும், விசுவாசமாகவும் செயல்பட வேண்டும் என்ற நடைமுறையின் ஒரு பகுதியாக, ஊழியர்களிடமிருந்து உயர்ந்த நெறிமுறை நடத்தையை பேணுவது அவசியமென பணிப்பாளர்கள் நம்புகின்றார்கள்.

**நியதிச் சட்ட கொடுப்பனவுகள்**
அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன அல்லது பொருத்தமான இடத்தில் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல.16, ஊழியர் நன்மைகளுக்கு (திருத்தப்பட்ட 2006) இணங்க ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

**பொறுப்புடமை மற்றும் வெளிப்படுத்துகை**
2023 டிசம்பர் 31, இல் முடிவடைந்த ஆண்டில், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கம்பனியின் விவகாரங்களில் உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை முன்வைப்பதாக தங்களைத் திருப்திப்படுத்துவதற்காக வருடாந்த நிதி கூற்றுக்களை விரிவாக மீளாய்வு செய்துள்ளனர். இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளரின் பொறுப்புகளின் சுருக்கம் பக்கம் 26 இல் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர. சபையின் கட்டளைப்படி

வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி
எச்.எல்.விபுல சில்வா
பணிப்பாளர் சபையின் செயலாளர

# கணக்காய்வு அறிக்கை

**கணக்காய்வுக் குழுவின் முதன்மைப் பங்கு**
